# உழைப்பாளர் தினம்!



மே தினம்
இன்று...

தேரோட்டம்
தீ மிதிப்பு
புரவியெடுப்பு
கூழ் ஊற்றல்
உறியடித்தல்
என

ஊருக்கு ஊர்
திருவிழாக்கள்

உலகில் பல
நிகழ்ந்தாலும்

தீபாவளி
பக்ரீத்
கிறிஸ்துமஸ்
என

மதத்திற்கு
மதம்
பண்டிகைகள்

மண்ணெங்கும்
நடந்தாலும்

தேசிய
தினம்

சுதந்திர
தினம்

குடியரசு
தினம்

குழந்தைகள்
தினம்

அன்னையர்
தினம்

தியாகிகள்
தினம்

காதலர்
தினம்

இவற்றோடு

எய்ட்சுக்கும்
தினம் என்று

எத்தனையோ
தினங்கள்

ஏகமாய்
இருந்தாலும்

நாடும்
ஊரும்

மதமும்
இனமும்
கடந்து

ஆண்
பெண்
எனும்

பாலின
பேதங்கள்
மறந்து

உலகமே
கொண்டாடும்
ஒரு விழா

அதுவே

உழைப்பாளர்
தினம்
என்னும்

உன்னதப்
பெருவிழா

சூரிய
உதயம் முதல்

அஸ்தமனம்
வரை

காலவரையின்றி
கசக்கி
பிழியப்பட்ட

உழைப்பாளர்
வர்க்கம்

உழைக்க
எட்டு மணி
நேரம்

உறங்க
எட்டு மணி
நேரம்

குடும்பத்துடன்
குதூகலிக்க

எட்டு மணி
நேரம் என

முழு
நாளையும்

மூன்றாக
வகுத்து

எட்டு மணி நேர
வேலை
திட்டத்தை

எங்களுக்கு
ஒதுக்கு
என்றே

சிகாகோ
நகரில்
தொடங்கிய

உரிமை
முழக்கம்

உக்கிரமாகி
ஆலை மிராசுகளின்
அக்கிரமம்
அடக்கப்பட்டு

உழைப்பாளர்
கோரிக்கை

ஒரு வழியாய்
வெற்றி கண்ட

மேதகு
நன்னாள் தான்

மே தினம்
என்கிற

வியர்வை
செலவாளிகளின்

வெற்றி
திருநாள்

இந்நாளில்

கைரேகை
தேய தேய
உழைத்து

கழனிகளில்
உழன்று
இளைத்து

கணினியில்
முகம் பதித்து

மலையை
பிளந்து
சிலையாக்கி

மரத்தை
பிளந்து
கதவாக்கி

ஆழ்கடலில்
மூழ்கி

அடக்கிய
மூச்சில்

முத்து சிப்பியில்
முகம் விழித்து


இன்னும்
இன்னுமாக

வியர்வை
பாய்ச்சி

விளைச்சல்
பார்க்கும்

உழைப்பாளி
வர்க்கத்தை

இந்நாளில்
வணங்குவோம்
வாழ்த்துவோம்!



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்*

# தொழிலாளர்களின் தோழர் கழகத் தலைவர்!

பாட்டாளிமக்களின் உரிமைக்காக, விடுதலைக்காக, வாழ்வுக்காக 140 ஆண்டுகளுக்கு முன்பு 1886 ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரத்தின் தெருக்களில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன் வைத்து வீர முழக்கம் எழுப்பியவாறு பேரணி நடத்தினார்கள், அப்போதைய அமெரிக்க அரசு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகினர். இந்நாளைத்தான் உலகெங்கும் உள்ள உழைக்கும் வர்க்கத்தின் உன்னத திருநாளாகவும், பாட்டாளி மக்களின் தினமாகவும் மே தினத்தை கொண்டாடி வருகிறோம்.

மே தின விழாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொண்டாடுவதில் ஒரு தனிச்சிறப்பும் உரிமையும் அதிகம் உண்டு காரணம் பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் கழக கொள்கைக்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்பதை நாம் அறிவோம். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் திராவிட இனமே பாட்டாளி இனம்தான் எனவும், திராவிடக் கலாச்சாரமே உழைத்து வாழ்வதையே வலியுறுத்துகிறது என தெரிவித்ததை மே தினத்தில் நினைவு கொள்வோம்.

1967ம் ஆண்டு முதன்முதலாக கழக ஆட்சியானது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்த போது இது தொழிலாளர் நல ஆட்சி எனவும், ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம் என்ற கொள்கை முழக்கத்துடன் தொடர்ந்து செயல்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பிறகு அவரது அன்புத்தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற கொள்கை முழக்கத்துடன் தொழிலாளர்களுக்கென ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தியது.

கழக ஆட்சி காலத்தில் தான் தொழிலாளர் நலத்துறை மற்றும் தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. பெரும் முதலாளிகளிடமிருந்த பேருந்து போக்குவரத்து அரசுடைமை ஆக்கப்பட்டது, அதே போல் சர்க்கரை ஆலைகளும் பொதுத்துறை நிறுவனங்களாகவும், கூட்டுறவுத்துறை மூலம் இயக்கப்பட கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென தனி வாரியம் உருவாக்கப்பட்டு இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு திருமண உதவி, மகப்பேறு உதவி, பிள்ளைகளுக்கான கல்வி உதவி, ஈமச்சடங்கு நிதி, ஓய்வூதியம் போன்ற பல நல உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் எப்போதும் உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்கும் மதிப்பளிப்பவர். காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகையானதும், கரம்பு ஊற்றானதும், பள்ளம் பாதையானதும் பாட்டாளியின் உழைப்பினால்தான் என்பதால் 1970 ஏப்ரல் 25ஆம் நாள் தொழிலாளர் தினமான மே தினத்தை சம்பளத்துடன் கூடிய அரசாங்க பொது விடுமுறை நாளாக முதன்முதலில் அறிவித்தார்.

1990 ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தின் பிரதமராக **வி. பி. சிங்** அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு நடைபெற்றது. இதில் திமுக கழகமும் அங்கம் வகித்திருந்ததால், தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் **வி. பி. சிங்** அவர்களிடம் பாட்டாளி மக்களின் திருநாளான மே நாளை உலகின் பல்வேறு நாடுகள் விடுமுறை நாளாக கொண்டாடி வருகின்றனர், மேலும் இந்த ஆண்டு (1990) மே தினத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதாலும் மே நாளை இந்திய அரசு பொது விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கையை வைத்தார். இதனை அன்றைய பிரதமர் வி. பி. சிங் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்தார்.

**முத்தமிழ் அறிஞர் கலைஞர்** அவர்கள் 1990 மே 1 அன்று அண்ணா சாலை அருகிலுள்ள நேப்பியர் பூங்காவை, **மே தின பூங்கா** என பெயர் மாற்றம் செய்து மே தின நினைவுத்தூண் எழுப்பி, பாட்டாளி வர்க்கத்திற்கு பெருமை சேர்த்ததோடு ஆண்டுதோறும் **கழகத் தலைவர்** தலைமையில் தொழிலாளர் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு **மே நாளை** உணர்வோடும், உரிமையோடும் கொண்டாடி வருகின்றனர். கழக ஆட்சி காலத்தில் தான் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் தோறும் தொழிற்பேட்டைகள் (சிப்காட்) உருவாக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான சிறு, குறு மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உருவானது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர் தோழர்கள் வேலைவாய்ப்பினை பெற்று இன்றும் நன்றியோடு கழக ஆட்சியை வாழ்த்தி வருகின்றன.

முதன்முதலில் குளித்தலையில் **1957ல்** சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் சட்டமன்றத்தில் தனது கன்னிப் பேச்சில் விவசாய தொழிலாளர்களின் துயரங்களைப் பற்றி பேசியது முதல் தனது இறுதி காலம் வரை அனைத்துத் துறைகளை சார்ந்த தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும், நல் வாழ்விற்காகவும் எண்ணற்ற நலத்திட்டங்களை அறிவித்து இறுதிவரை பாட்டாளி மக்களின் பாதுகாவலராக விளங்கினார்.

இந்திய ஒன்றியத்தில் முதல் முதலாக **1923** ஆம் ஆண்டு சென்னையில் தான் முதல் "மே தினம்" கொண்டாடப்பட்டது. இதனை அன்றைய தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அழைக்கப்படும் **சிங்காரவேலர்** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்திய தொழிலாளர்கள் மீது அந்நிய முதலாளிகளின் ஆதிக்கம் உச்சத்தில் இருந்த வேளையில் இந்திய ஒன்றியத்தில் முதன்



முதலாக சென்னையில் தான் 1918 ஏப்ரல் 24ல் **"மதராஸ் லேபர் யூனியன்"** என்ற பெயரில் முறைப்படியான தொழிலாளர் சங்கம் உருவானது. இந்த சங்கத்தில் பி.பி.வாடியா தலைவராகவும், தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் கேசவப்பிள்ளையும் துணைத் தலைவர்களாகவும், செல்வப்பதியும், ராமானுஜலுவும் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர் என்பது நாம் அனைவரும் அறிந்த தமிழ்நாட்டின் புகழுக்குரிய வரலாற்று பெருமையாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியா முழுவதிலும் உள்ள உழைக்கும் தொழிலாளர்கள் மீது அநீதிகளையும் அடக்குமுறைகளையும் அடிமைத்தனத்தையும் ஆதிக்கம் செலுத்தி வந்த வேளையில் இந்தியாவில் தமிழ் நாட்டு மண்ணில் இருந்து தான் அந்நிய முதலாளிகளுக்கு எதிராக முதன்முதலாக தொழிலாளர் சங்கம் உருவானது, மே தின கொண்டாட்டம், செங்கொடியேற்றம் போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன என்பது வரலாறு.

தற்போதும் பாசிச பா.ஜ.க. ஆட்சியினர் செய்து வரும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, செயல்களையும், அநீதிகளையும் கண்டிப்பதிலும் எதிர்ப்பதிலும் இந்திய ஒன்றியத்திலேயே முதல் குரல் கொடுத்து வருபவர் சுயமரியாதையும், வீரமும் நிறைந்த தமிழ் மண்ணில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் இந்தியாவின் முதன்மையான முதல்வர், மகத்தான தலைவர் **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள் தான் என்பதை நாடறியும்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இவர்களின் வழியில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நமது முதல்வர் அவர்கள் தொழிலாளர் நலன் மற்றும் தொழிற் வளர்ச்சியில் இந்தியாவிற்கே வரிகாட்டியாகவும் முன்னோடி மாநிலமாகவும் தமிழ்நாட்டை உயர்த்தியுள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் அதிக அளவில் தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்ததோடு பல லட்சக்கணக்கான தொழிலாளர்களக்கு வேலை வாய்ப்பையும் பெற்று தந்துள்ளார்.

தொழிற் வளர்ச்சியில் இந்தியாவின் இரண்டாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு தற்போது முதல் இடத்தை நோக்கி வளரும் மாநிலமாக திகழ்கிறது. எந்த மாநிலத்திலும் இல்லாத பொருளாதார வளர்ச்சியாக

11.19% தொடர்ந்து செயல்பட்டு வருவதோடு, திராவிடமாடல் அரசானது ஒன் டிரில்லியன் பொருளாதார இலக்கு என்ற உயர்ந்த இடத்தை அடைய கழக தலைவர் அவர்கள் அயராது உழைத்து வருகிறார்.

இந்திய ஒன்றியத்தில் மின் வாகன தயாரிப்பில் முதன்மை மாநிலமாகவும், சிறு மற்றும் பெரு நகரங்களில் டைடல் பார்க், பின் தங்கிய மாவட்டங்களிலும் தொழிற்பேட்டைகளை அமைத்து தந்தவர் கழக தலைவர் ஆவார். ஒட்டு மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாடு 14வது இடத்திலிருந்து 3வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டில் தான் அதிகமான பெண் தொழிலாளர்கள் பணி செய்து வருகின்றனர். இவர்களுக்கு தங்குவதற்கு பாதுகாப்பான இடமும் அரசு சார்பில் அந்தந்த தொழிற்பேட்டையின் அருகே அனைத்து வசதிகளுடன் அமைத்து கொடுத்ததும் திராவிட மாடல் அரசு என்பதை இந்த மே தினத்தில் நினைவு படுத்த விரும்புகின்றோம்.

கழக தலைவர் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில்தான் தொடர்ந்து அதிக அளவில் தொழில் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்ததோடு, பல லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் பெற்று தந்த கழக தலைவர் அவர்களுக்கு அனைத்து தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தார்களும் மே தின நன்நாளில் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியை அடையும் போது பொருளாதார ரீதியாக உயர்வு பெறுவதோடு மட்டுமல்லாமல், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு உருவாக்கும் என்ற அடிப்படையில் கழக அரசு தொழிலாளர் நலன் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகிய இரண்டையும் சமமாக கருதி செயல்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொரு பட்ஜெட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

### காரல் மார்க்சிற்கு சிலை:

உலக அளவில் கொண்டாடப்பட்டு வரும் மாமேதையும், பொதுவுடமைவாதியும், சிந்தனையாளருமான காரல் மார்க்சிற்கு இதுவரை தமிழ் நாட்டில் சிலை இல்லாத நிலையில் 3.4.2025 அன்று சட்டமன்றத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் **முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள் உலக தொழிலாளர்களே ஒன்றுபடுவோம் என முழங்கிய காரல் மார்க்சிற்க்கு சென்னையில் சிலை வைப்பதாக அறிவித்தார். சொல்வதை செய்வோம் என்கின்ற கோட்பாட்டின்படி கழக தலைவர் அவர்கள் சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காரல் மார்க்ஸின் முழு உருவ கம்பீரமான சிலையை 6.2.2026 அன்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்வின் போது அனைத்து கட்சி தலைவர்களும், பொதுவுடமைவாதிகளும், தொழிற்சங்க தலைவர்களும் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் பேசிய தலைவர் பெருமக்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எப்போதும் பாட்டாளியின் பாதுகாவலராக இருப்பார் என்பதற்கும், கழக ஆட்சி என்பது தொழிலாளர் நல ஆட்சி என்பதை நிரூபிக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்ற பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்தனர்.

### மோடி ஆட்சியில் வஞ்சிக்கப்படும் தொழிலாளர் வர்க்கம் :

மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஏற்கனவே நடைமுறையில் இருந்த **44** தொழிலாளர் நல சட்டங்களை **29** சட்டங்களாக குறைத்து மாற்றிவிட்டது. எஞ்சிய **15** சட்டங்களை ரத்து செய்து விட்டது. மாற்றப்பட்ட **29** சட்டங்களையும் நான்கு தொகுப்புகளாக மாற்றியதோடு மேலும் **44** சட்ட தொகுப்புகளில் இருந்த **1200** சரத்துக்களையும் **479**ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்ட திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் போதுமான விவாதம் இன்றியும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் இல்லாத நேரத்தில் சட்டம் இயற்றப்பட்டது ஜனநாயக விரோத செயலாகும்.

நமது முன்னோர்கள் எத்தகைய வேதனைகளையும், சோதனைகளையும் கடந்து பல கட்ட வாதங்களுக்கு பிறகே கடந்த காலத்தில் சட்ட வடிவமான தொழிலாளர் நல சட்டங்கள் அனைத்தையும் கார்ரேட் நலன் ஒன்றே பெரிது என நினைத்து, இந்திய ஒன்றியத்தில் உள்ள அம்பானி, அதானி போன்ற பல கார்புரேட்டுகளுக்கு ஆதரவாகவும், உழைக்கும் தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், எதிராகவும் செயல்படும் பாசிச பாஜக ஆட்சி நடத்தி வரும் மோடி அரசையும் இவரது கூட்டாளிகளையும் தொழிலாளர் தோழர்களும், பாட்டாளி மக்களும் ஒரு போதும் ஏற்கமாட்டோம் என இந்த மே தின நன்நாளில் சூளுரைப்போம்.

### பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழி:

தி.மு.கழகம் **கடமை**, **கண்ணியம்**, **கட்டுப்பாடு** என்ற மூன்று கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் இம்மூன்றும் தேவை என்று **பேரறிஞர் பெருந்தகை அண்ணா** அவர்கள் தெரிவித்துள்ளார், அதாவது


பாட்டாளிமக்களுடைய **"கடமை"** – சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலேதான் இருக்கிறது.

பாட்டாளிமக்களுடைய **"கண்ணியம்"** – தங்களுடைய சக்தியை பாழ்படுத்தி கொள்ளாததிலே தான் இருக்கிறது.

பாட்டாளி மக்களின் **"கட்டுப்பாடு"** – தங்களுடைய ஒற்றுமையை யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலேதான் இருக்கிறது.

என **பேரறிஞர் பெருந்தகை அண்ணா** தெரிவித்ததை தொழிலாளர் தோழர்களும், பாட்டாளி மக்களும் இந்த மே தினத்தில் நினைவு கொள்வோம்.

பாட்டாளி மக்களின் விடுதலை தினமாக பாரெங்கும் கொண்டாடப்படும் இந்த மே தினத்தில் வறுமை ஒழிக்கப்பட்டு, எல்லோருக்கும் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என்ற கோட்பாட்டின்படி செயல்பட்டு வரும் கழக தலைவர் தலைமையிலான அரசு மீண்டும் அமைவது உறுதி, உறுதி என தெரிவித்துக் கொள்வதோடு, பாசிச பா.ஜ.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களை வஞ்சிக்கும் நல சட்டத்திற்கு எதிராகவும், மேலும் தொழிலாளர்கள் நாளொன்றிற்கு எட்டு மணி நேரம் உழைப்பு, எட்டுமணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் குடும்பத்தினருடன் வாழ்வது என்ற கொள்கைக்கு பாதுகாப்பு அரணாக திராவிட மாடல் அரசு எப்போதும் செயல்படும் என்பதை மே தின நாளில் தெரிவிப்பதோடு தமிழர்களின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்து வரும் முதல் அமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அரும்பணிகள் மேலும், மேலும் சிறக்க, தொடர தொழிலாளர்வர்க்கம் என்றென்றும் நன்றியோடும் உறுதுணையாகவும் இருக்கும் என்பதை இந்த மே தின நன்நாளில் தெரிவித்துக் கொள்கிறோம்.



**மு. இராஜகாந்தம்**
மாநில துணை செயலாளர்
தொழிலாளர் அணி
தொ.மு.ச.பேரவை செயலாளர்